பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 194

திங்கட்கிழமை
09 ஜூன் 2025

ஆம் நாள்
ஆண்டு 2056

## ஜெனீவா - 59 அமர்வு ஜூன் 16 ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 9
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 59 ஆவது

11

இலங்கைவரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம்

# உள்ளகப் பொறிமுறைக்கு ஆதரவுதேட கடும் முயற்சி

## வேலைத்திட்டங்களை தெளிவுபடுத்த அரசு திட்டம்

## பல தரப்புகளையும் சந்திக்கவுள்ளார் ஆணையாளர்

கொழும்பு, ஜூன் 9

பொறுப்புக்கூறல் விவகாரத்தில் உள்ளகப் பொறிமுறையை வலுப்படுத்துவதற்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு தெளிவு படுத்தப்படவுள்ளது.

11



# ஜேர்மனிக்கு நாளை பறக்கின்றார் அநுர

## ஐரோப்பிய சந்தையைப் பிடிப்பாரா?

கொழும்பு, ஜூன் 9
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளை இரவு ஜேர்மனிக்குப் பயணமாகவுள்ளார்.
ஜேர்மனியால் விடுக்கப்பட்ட அதிகாரபூர்வ அழைப்பையேற்று அங்கு செல்லும் ஜனாதிபதி அநுர, ஜேர்மன் ஜனாதிபதி, வர்த்தக அமைச்சர் உள்ளிட்ட தரப்பினருடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார். 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் அங்கு சந்திப்புகள் ஏற்பாடு

12

# உள்ளூராட்சிசபைகளில் கூட்டணி தேவை இல்லை

## 17 சபைகளிலும் நாமே ஆட்சியமைப்போம்

## இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9
உள்ளூராட்சி சபைகளில் கூட்டணி அமைத்து ஆட்சியமைக்கவேண்டிய தேவை இல்லை. மக்களின் கைகளுக்கு அதிகாரம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே போட்டியிட்டோம். அதனால் மக்களின் ஆணை எங்களுக்கு உள்ள இடங்களில் ஆட்சியை கைப்பற்றுவதற்காக ஒழுங்குகளை செய்வோம் - இவ்வாறு

11

# இந்திய முதலீட்டை ஊக்குவிக்கத் திட்டம்

## சந்தோஷ் ஜா தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 9
இந்திய நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களை கொழும்பு பங்குச் சந்தையில் முதலிட ஊக்குவிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

10

# சட்டத்தரணி மீது அவதூறு பேஸ்புக்கில் பதிவிட்டவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 9
இணையத்தளம் ஒன்றில் வெளியிடப்பட்ட செய்தியொன்றைப் பகிர்ந்து, சட்டத்தரணி ஒருவருக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் பேஸ்புக்கில் பதிவிட்ட

11

தெல்லிப்பழை மருத்துவமனையில்

## அர்ப்பணிப்புடன் கடும்முயற்சி செய்து உயிரைக் காப்பாற்றிய மருத்துவக்குழு

விரிவு
பக்:- 10

# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வாய்ப்புள்ள சபைகளில் ஆட்சியமைக்கும் முயற்சி

## யாழ்.மாநகரசபையிலும் போட்டி?

## அமைச்சர் சந்திரசேகர் சூசகம்



யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு சில உள்ளூராட்சி சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதற்கான சூழல் ஏற்பட்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளை நாங்கள் கண்டிப்பாக மேற்கொள்வோம் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
யாழ். காங்கேசன்துறை ரயில் நிலையத்தில்

12



தெல்லிப்பழையில்

# புற்றுநோய் மருத்துவமனையின் இயங்குதிறன் பாதிக்கும் நிலை!

## சிலரின் திட்டமிட்ட கைங்கரியமே காரணம்

## அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 9
தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு எதிரான திட்டமிட்ட முயற்சிகளால் மருத்துவமனையின் இயங்குதிறன் முற்றாகப் பாதிக்கும் நிலையை நோக்கி நகர்ந்துள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தெல்லிப்பழைக்

11

'நல்லது செய்யிறவைக்கு உதவி செய்யாட்டியும் உபத்திரமாவது செய்யாமல் இருங்கோவன்'

# ஹெரோய்ன், கஞ்சாவுடன் யாழ். நகரில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 9
ஹெரோய்ன் மற்றும் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்று அதிகாலை, யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

10

# மாகாணசபைத் தேர்தலை டேர்க்கிடம் வலியுறுத்துங்கள்

## கலாநிதி தயான் ஜயதிலக தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 9
இலங்கைக்கு வரவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளரிடம் வடக்கு, கிழக்கு அரசியல், சிவில் தரப்பினர் இணைந்து மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் வலியுறுத்தவேண்டும் என்று இராஜதந்திரியும், அரசியல்

10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | ஏனைய |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 08.06.2025 | 4096 | A | 17 38 44 47 | விசேட எழுத்து A |
| ஹந்தஹண ராசி சுப பலன் | 08.06.2025 | 1163 | | 14 20 33 51 | வெற்றி இலக்கினம் விருச்சிகம் |
| NLB ஜய | 08.06.2025 | 0122 | L | 4 2 3 0 | |
| மெகா பவர் | 08.06.2025 | 2202 | R | 11 29 51 56 | சுப்பர் இலக்கம் 06 |
| மஹஜன சம்பத | 08.06.2025 | 5854 | L | 6 4 4 1 9 1 | |
| தன நிதானய | 08.06.2025 | 1884 | Z | 07 11 38 81 | விசேட எழுத்து Z |
| அத சம்பத | 08.06.2025 | 0429 | L | 4 1 9 1 | |

# செம்மணிப் புதைகுழியில் அரசு விசேட அவதானம்!

## நீதியமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 9**

**செம்மணியில் முன்னெடுக்கப்பட்டுவரும் மனிதப்புதைகுழி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அகழ்வுப்பணிகள் இடம்பெற்ற குற்றப் பகுதி, மனிதப்புதைகுழியாக நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அந்தப் புதைகுழிக்குள் இருந்து இதுவரை 19 மனிதச் சிதிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, நீதியமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: செம்மணி மனிதப்புதைகுழியில் மீட்கப்படும் அனைத்து மனிதச் சிதிலங்களும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும். பகுப்பாய்வின் பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

நீதிமன்றத்தின் அனுமதியில் குறித்த பகுதியில் தொடர்ச்சியாக அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க அனுமதிவழங்கப்பட்டுள்ளது. அதுகுறித்து வழக்குகளும் நீதிமன்றில் நிலுவையில் உள்ளன.

ஆகவே நீதிமன்றம்தான் இறுதியான முடிவை எடுக்கும். ஆனால், அகழ்வுப் பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கான நிதி உள்ளிட்ட உதவிகளை அரசாங்கம் வழங்கும். இந்தப் புதைகுழி விடயத்தில் நாங்கள் அக்கறையுடன் உள்ளோம் - என்றார். (ம-இ)



# காலாவதியான மருந்து விற்பனை வர்த்தகருக்கு சிறை

கொழும்பு, ஜூன் 9

தெஹிவளை கவுடானப் பகுதியில் உள்ள ஒரு மருந்தகத்தில் காலாவதியான மருந்துகளை விற்பனைக்காகக் காட்சிப்படுத்திய வர்த்தகர் ஒருவருக்கு 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட, ஆறு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 10,000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

2025 பெப்ரவரி 7ஆம் திகதியன்று நடத்தப்பட்ட சோதனையின் போது, குற்றஞ்சுமத்தப்பட்ட குறித்த வர்த்தகருக்கு, கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பை அறிவித்துள்ளது. (ச-இ)

# சமல் விரைவில் கைது

## இல்லாத வீடொன்றுக்கு இழப்பீடு பெற்றதால் வந்த வினை

கொழும்பு, ஜூன் 9



மஹிந்த ராஜபக்ச மற்றும் கோத்தாபய ராஜபக்ச ஆகியோரின் ஆட்சியின்கீழ் பிரதான வகிபாகத்தை வகித்த முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச, விரைவில் கைதுசெய்யப்படலாம் என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இல்லாத வீடொன்றுக்காக மோசடியான முறையில் இழப்பீடுபெற்ற குற்றச்சாட்டு தொடர்பிலேயே அவர் கைது செய்யப்படக்கூடும் எனக் கூறப்படுகின்றது.

2022 மே 9 மக்கள் புரட்சியின்போது (அரகலய) திஸ்ஸமகாராம பகுதியிலுள்ள தனது வீடு உள்ளிட்ட சொத்துகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன எனப் போலியான தகவல்களை வழங்கி ஒரு கோடியே 50 இலட்சத்து 22 ஆயிரத்து 600 ரூபாவை சமல் ராஜபக்ச மோசடியாகப் பெற்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் இலஞ்ச, ஊழல் தடுப்பு விசாரணைப்பிரிவு அவரிடம் விரைவில் விசாரணை நடத்தவுள்ளது.

இழப்பீட்டைப் பெறுவதற்காக முன்வைக்கப்பட்ட சொத்துகள் சமல் ராஜபக்சவினது அல்ல எனவும், அது பிறிதொரு நபரின் பெயருக்குரியவை எனவும் தெரியவந்துள்ளது.

அதேபோல வீடு தீக்கிரையாகவில்லை எனவும், நெற்களஞ்சிய சாலையொன்றே தீக்கிரையாகியுள்ளது எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (ச-44)

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 08.06.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0562 | S | 6 3 7 7 3 7 |

## Super Ball

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 08.06.2025 | ஞாயிற்றுக்கிழமை | 2828 | Y | 13 63 65 74 |

## சனிதா

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 08.06.2025 | ஞாயிற்றுக்கிழமை | Y | 28 45 60 72 | 4989 |

## SASIRI

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 08.06.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0700 | 14 44 47 |

## லக்ன ராசி

| திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 08.06.2025 | ஞாயிற்றுக்கிழமை | கும்பம் | 14 37 49 51 | 4540 |

## KAPRUKA

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 08.06.2025 | ஞாயிற்றுக்கிழமை | X | 19 | 10 34 62 64 | 2004 |

## அத கோடிபதி

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 08.06.2025 | ஞாயிற்றுக்கிழமை | V | 07 19 51 69 | 2654 |

# மஹிந்தானந்த மீது மற்றொரு வழக்கு

கொழும்பு, ஜூன் 9

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக மற்றுமொரு வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தகவல்கள் கூறுகின்றன.

அவருக்கு ஏற்கனவே தண்டனை வழங்கப்பட்டுள்ள கரம் போர்ட் மோசடியுடன் தொடர்புபட்டதுதான் இந்த வழக்கும் என்று தெரியவருகிறது.

ஏற்கனவே வழங்கப்பட்ட தண்டனை கரம் போர்ட் மோசடியுடன் தொடர்புபட்டது. இப்போது தாக்கல் செய்யப்படவுள்ள வழக்கு 'குற்றத்தோடு' தொடர்புபட்ட வழக்கு எனக் கூறப்படுகிறது.

இந்தக் கொடுக்கல் வாங்கலில் சதியும் செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டும் உள்ளடக்கப்படவுள்ளது என்று சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரம் தெரிவித்துள்ளது.

கரம் போர்ட் மோசடி தொடர்பில் 20 வருடங்கள் தண்டனை விதிக்கப்பட்டு தற்போது வெலிக்கடைச் சிறையில் மஹிந்தானந்த அளுத்கமகே தண்டனையை அனுபவித்துவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-44)

# ஊழல் அரசியல்வாதிகள் கடவுள்களிடம் மன்றாட்டம்

கொழும்பு, ஜூன் 9

தாம் கைதுசெய்யப்படலாம் என்ற அச்சம் காரணமாக கடந்த வாரம் 50க்கும் மேற்பட்ட முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகள் பௌத்த விகாரைகள் மற்றும் தேவாலயங்களுக்குச் சென்று விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுள் அதிகமானவர்கள் சொத்துக்குவிப்பு உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள். இவர்களுள் 20க்கும் அதிகமானவர்கள் கதிர்காம தேவாலயத்துக்குச் சென்று பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

இன்னும் பலர் அநுராதபுரம் சென்று சிறிமகாபோதியில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டுத் தேரர்களின் ஆசியையும் பெற்று வந்துள்ளனர். இன்னும் சிலர் இந்தியாவுக்குச் சென்று பெரும் பூஜை வழிபாடுகளிலும் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. (ச-44,75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 323 கொள்கலன்களில் புலிகளின் ஆயுதங்களில்லை

## சுங்கத் திணைக்களம் நிராகரிப்பு

**கொழும்பு, ஜூன் 9**

**சுங்கத்திலிருந்து பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள் கலன்களில் புலிகள் அமைப்பின் ஆயுதங்கள் இருந்தன என முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை இலங்கை சுங்கத் திணைக்களம் முற்றாக நிராகரித்துள்ளது.**

சுங்கத்திலிருந்து விடுவிக் கப்பட்ட கொள்கலன்களில் ஆயுதங்களோ, தங்கமோ அல்லது போதைப்பொருள் களோ இருக்கவில்லையென்று சுங்க திணைக்கள ஊடக பேச்சாளரும் சுங்க திணைக் களத்தின் மேலதிகப் பணிப் பாளர் நாயகமுமான சீவலி அருக்கொடதெரிவித்துள்ளார்.

சுங்கத்தில் கடும் நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தது. கொள்கலன்கள் தேங்கிக் கிடந்தன. பொருள்கள் விடு விக்கப்படும் அளவும் குறை வாகவே இருந்தது. இதனால் இறக்குமதியாளர்கள், சாரதி கள் எனப் பல தரப்பினரிட மும் முறைப்பாடுகள் கிடைக் கப்பெற்றன. விடுவிக்கப் படும் நடவடிக்கையை விரை வுபடுத்துமாறும் கோரப்பட்டி ருந்தது.

நெருக்கடி நிலையைத் தவிர்ப்பதற்காக கொள்க லன்கள் விடுவிக்கப்பட்டன. எனினும் சட்டவிரோத பொருள்கள் வந்திருந்தால் உளவுத் தகவல்கள் கிடைத்தி ருக்கும். எனவே, அச்சுறுத் தல் இல்லையெனக் கருதப் பட்ட பொருள்களே விடுவிக்கப்பட்டுள்ளன.

குழுவின் நிர்ணயங்களுக்கு அமையவே கொள்கலன் கள் விடுவிக்கப்பட்டன. அழுத்தங்கள் எவையும் பிர யோகிக்கப்படவில்லை- என் றார். (ச-44)

## மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூன் 9

நாட்டின் பல பகுதியில் நாளை முதல் மழை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவா னிலை ஆய்வு மையம் தெரி வித்துள்ளது. அதன்படி, மேற்கு, சப்ரகமுவ மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற் றும் மாத்தறை மாவட்டங்களி லும் பலத்த மழை பெய்யும். வடக்கு மற்றும் ஊவா மாகா ணங்களில் சில இடங்களில் பிற்பகல் அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கால்நடை மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜூன் 9

அரசாங்கக் கால்நடை மருத்துவர்கள் சங்கம் இன்று காலை 6 மணி முதல் 24 மணிநேர அடையாள வேலைநிறுத்தத்தை முன்னெடுக்கவுள்ளது. கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் சங்கத்தின் தலைவர் மருத்துவர் உப்புல் ரஞ்சித் குமார இதனைத் தெரிவித்தார்.

கால்நடை மருத்துவர்களுக்கான தனியான சேவை யாப்பை தயாரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், அதனைக் குழப்புவதற்கு விவசாய அமைச்சின் செயலாளர் தொடர்ந்து முயற்சிப்பதாகத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ச-இ)



## கிளி திருட்டு

கொழும்பு, ஜூன் 9

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச் சாலையிலுள்ள கூண்டிலிருந்து 5 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி யான நீலம் மற்றும் மஞ்சள் நிற மெக்கோக் கிளி ஒன்று திருடப்பட்டுள்ளதென பொலிஸார் தெரிவித்துள்ளனர். கிளி வைக்கப்பட்டுள்ள கூண்டில் நீலம் மற்றும் மஞ்சள் நிற மெக்கோகள் 30 உள்ளதுடன், அவற்றில் ஒன்றே திருடப்பட்டுள்ளது. இது குறித்து நிர்வாகம், ஒரு பாதுகாப்பு அதிகாரி மூலம் தெஹிவளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்தது. (ச-இ)

## எம்.பி.க்களின் 'பென்ஷன்' அவுட்

கொழும்பு, ஜூன் 9

நாடாளுமன்ற உறுப்பினர் களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்யும் சட்டமூலம் ஒன்று இந்த வாரம் அமைச்சரவை யில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று அரச தகவல்கள் தெரி வித்துள்ளன.


நாடாளுமன்ற உறுப்பினர்க ளின் ஓய்வூதியத்தை நீக்குதல் என்பது ஜேவிபியின் நீண்டகாலக் கொள்கையாகும். அதுமாத்திர மன்றி அவர்கள் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளில் அது வும் ஒன்று.

அதற்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அதற் கான சட்டமூலம் பூர்த்தியாகி இந்த வார அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்ச ரவை அங்கீகாரம் பெறப்படும் என்றும் அரச வட்டாரம் தெரி வித்திருந்து (ச-இ)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 9

மட்டக்குளிப் பொலிஸ் பிரிவின் சமித்புரப் பகுதியில் ரி-56 துப்பாக்கி மற்றும் 29 தோட்டாக்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு வடக்குப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் அதிகாரிகள் குழுவினால் சந் தேகநபர் கைதுசெய்யப்பட்டார். (ச-இ)



## புதினம் தெரியுமோ?

### 'நெருப்பெறும்புப் பள்ளிக்கூடம்'

குளத்தோட கோவிச்சுக்கொண்டு குளிக்காமல் இருந்தமாதிரி, பழைய மாணவர் ஒராளோட கோவிச்சுக்கொண்டு ஒருநாள் முழுக்க பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு படிப்பிக்காமலே இருந்திருக்கின மாம். யாழ்ப்பாணத்தில பேமஸான ஒரு கண்ணன் கோயிலுக்குக் கிட்ட இருக்கிற, அதே கண்ணனின்ர பேரில இருக்கிற பள்ளிக்கூடத்திலதான் இப்பிடியொரு விளையாட்டை அங்க இருக்கிற பதில் அதிபரும் ரீச்சர் மாரும் காட்டியிருக்கினம். அப்பிடி அவைக்கு அந்தப் பழையமாணவரில என்னதான் கோபம்?

அந்தப் பள்ளிக்கூடத்தில இப்ப அதிபர் பதவிக் கெண்டு நிரந்தரமா ஒராள் இல்லை. அதால பதில் அதிபரை வைச்சுத்தான் அந்தப் பள்ளிக்கூடத்தைக் கொண்டிழுத்துக்கொண்டு போயினம்.எண்டாலும் உடையவன் இல்லாட்டி ஒரு முழம் கட்டை தானே.அதால பள்ளிக்கூடத்தில கனக்கச் சிக்கல்கள் ஓடுது. ட்ரெஸிலிங் சண்டைமாதிரி பள்ளிக்கூடப் பிள் ளையளுக்கு முன்னால ரண்டு ரீச்சர்மார் பாய்ஞ்சு பாய்ஞ்சு அடிபடுற அளவுக்கு அங்க நிர்வாகம் சீர் கெட்டுப்போய்க்கிடக்கு. அதால ஒரு ஆமான ஆளை அதிபராப் போடச்சொல்லி பழையமாணவர்மாரும், பெற்றாரும் ஆளுநரில இருந்து எல்லா அதிகாரி மாருக்கும் கடிதம் போட்டும், எல்லாம் ஆத்தில போட்ட கல்லுமாதிரி ஒண்டுமே நடக்கேலை.

இப்பிடிப்பட்ட நிலையில, அந்தப் பள்ளிக்கூடத் தில மூண்டாம் வகுப்புப் பெடியன் ஒருத்தன் ஏதோ பிழை விட்டிட்டான். அதுக்கு அந்தப் பெடியனை முட்டுக்காலில இருக்கச் சொல்லி ரீச்சர் தண்டனை குடுத்திருக்கிறா. பிழைவிட்ட பிள்ளையளுக்கு இப்பிடிச் சின்னச்சின்னத் தண்டனை குடுத்தாத்தான் திருத்தலாம் எண்டுறதுதான் ரீச்சர்மாரின்ர நியாயம். ஆனா அந்தாச் சின்னத்தண்டனையே சித்திர வதையா மாறக்கூடாதெல்லோ. அந்தச் சின்னப்பெடி யனை அந்த ரீச்சர் 'நெருப்பெறும்பு இருக்கிற இடத் துக்கு மேலதான் முட்டுக்கால் போடச்சொல்லியிருக் கிறா. நெருப்பெறும்புக்கு மேல முட்டுக்காலில இருந் தால் என்ன நடக்குமெண்டு யோசிச்சுப் பாருங்கோ. எறும்பு கடிக்குதெண்டு எழும்பவும் ஏலாது. அதால அந்தச் சின்னப்பெடியன் நெருப்பெறும்புக்கடியைத் தாங்கிக்கொண்டு, ரீச்சர் சொல்லும்வரை முட்டுக் காலில இருந்திருக்கிறான். இந்த விசயம் எப்பிடியோ வெளியில தெரியவந்து, ஒரு பழையமாணவர் அதைத் தன்ர பேஸ்புக்கில போட்டிட்டார் எண்டுதான் பதில் அதிபரும், ரீச்சர்மாரும் ஒருநாள் முழுக்க படிப் பிக்காமல் ஸ்ட்ரைக் செய்தவையாம். இதையெல் லாம் மேலதிகாரிமாரும் பார்த்துக் கொண்டு தானே இருக்கினம். எந்தவொரு அதிகாரிக்கும் ஒரு நல்ல ஆளுமையான அதிபரை அந்த நெருப்பெறும்புப் பள்ளிக்கூடத்துக்குப் போட்டு அதை முன்னேற்றுற எண்ணம் இருக்கிறமாதிரித் தெரியேலை. இனி அந்தக் கடவுள் கண்ணன்தான் உதுக்கொரு வழி காட்டோணும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். சிலருக்கு குடும்பம் தொடர்பான வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடலாம்.

**இடபம்:** சகோதரவகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்க ளுக்காக வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டாலும் பெரிய அளவில் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்ப உறுப்பினர்கள் உங்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிற்பகலுக்கு மேல் சிலருக்கு புதிய நண்பர்களின் அறிமுகமும், அதனால் ஆதாயமும் உண்டாகும்.

**கடகம்:** சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். நீண்ட நாளாக எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்வீர்கள். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். முக்கியப் பிரமுகர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**கன்னி:** அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று கிடைக்க வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தைவழி உறவினர்க ளால் ஆதாயம் உண்டாகும்.சகோதரர்கள் அனு சரணையாக நடந்துகொள்வார்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பிற்பகலுக்கு மேல் மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முயற்சிகளை யோசித்து எடுப்பது நல்லது. கடன்கள் விஷயத்தில் சற்று எச்சரிக்கை யாக இருக்கவும். பிற்பகலுக்கு மேல் பிள்ளை களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சிறு தடை ஏற்படக்கூடும். மாலை யில் மனதுக்கு மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும். இளையசகோதரவகையில் அனுகூலம் உண்டாகும்.

**மகரம்:** வெளியூரில் இருந்து வரும் செய்தி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும். மற்றபடி வீட்டில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். வியாபாரத்தில் போட்டியாளர்களின் தொல்லைகளைச் சமாளிப்பீர்கள்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். சகோதரர்கள் பணம் கேட்டுவருவார்கள். பிள்ளைகளுக்காக செலவுசெய்யவேண்டி இருக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்றுவருவீர்கள்.

**மீனம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடுபடா மல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் பிரச்சினை ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை வழி உறவுகள் உதவி கேட்டுவருவார்கள்.



படங்கள்: ஐ.சிவசாந்தன்



யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி ஸ்ரீ சிவகுரு நாதர் சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா நேற்றுக் காலை பக்தி பூர்வமாக இடம் பெற்றது. (ச)

## வைகாசி விசாகம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வைகாசி விசாக உற்சவம் இன்று திங்கட்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணியளவில் சண்முக திரவ்ய மகா அபிஷேகம் ஆரம்பமாகித் தொடர்ந்து முற்பகல் 10.30மணியளவில் சண்முக நியாஸம், சகஸ்ர நாம அர்ச்சனை இடம்பெறும். மாலை 4 மணியளவில் சாயரட்சைப் பூசை ஆரம்பமாகும். மாலை 4.45மணியளவில் வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராக உள்வீதி உலா வரும் திருக்காட்சி நடைபெறும். (ச-41-66)

## பல்சுவைக் கதம்பம்

மட்டக்களப்பு, ஜூன் 9

கோவில் போரதீவு உதயதாரகை கலை விளையாட்டுக்கழகம் பெருமையுடன் வழங்கும் 'பல்சுவைக் கலைக்கதம்ப விழா' நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

உதயதாரகை கலை விளையாட்டுக் கழகத்தலைவர் ம.கோகிலராஜ் தலைமையில் கண்ணகியம்மன் ஆலய முன்றலில் உள்ள உதயதாரகை கலை அரங்கில் இரவு 8 மணிக்கு படையாட்சி குலப்பெருமகளால் நெறிப்படுத்தப்படும் ஸ்ரீ கண்ணகி அம்பாள் திருச்சடங்கு விழா இடம்பெறவுள்ளது.

பல்சுவைக் கலைக்கதம்ப விழாவில் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ச-41-100)

## மல்லாகத்தில் யோகா பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 9


உலக சமாதான ஆலயத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள இலவச யோகாக்கலைப் பயிற்சி வகுப்புகள் மல்லாகத்தில் அமைந்துள்ள முகிழம் கலையகத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து 3 மாதங்கள் வரை இடம்பெறவுள்ளது. இங்கு நடைபெறவுள்ள குறித்த பயிற்சி வகுப்புகளில் யோகாக்கலை பற்றியதான விளக்கமும், நோய்கள் குணமாக என்னென்ன யோகாசனங்கள் மேற்கொள்ள வேண்டும்? என்பது தொடர்பிலும் யோகக் கலையுடன் தியானப் பயிற்சியை மேற்கொள்வது தொடர்பிலும் விரிவான விளக்கங்கள், பயிற்சிகள் வழங்கப்படும். இந்தப் பயிற்சி வகுப்பில் சிறியவர் முதல் பெரியவர் வரை ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம். பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள நாட்டம் உள்ளவர்கள் 0773128651 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-22,66)

## வைகாசிப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 9

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வைகாசிப் பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சிறப்பாக இடம் பெறவுள்ளது.

காலை 6 மணியளவில் திருவாசக முற்றோதல் ஆரம்பமாகி இடம்பெறும். விசேட நிகழ்வுகளாக உளவளத் துணையாளர் நா.நவராஜ்ஜின் சிறப்புச் சொற்பொழிவும், 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை வெளிவந்த ஞானச் சுடர் மலரில் ஆக்கங்களை எழுதிய கட்டுரையாளர்கள் அனைவரையும் கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறுமென சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் தெரிவித்துள்ளார். (ச-41-66)



## நாகதீப விகாரைக்கு இரத்தின நாற்காலி

யாழ்ப்பாணம், ஜூன் 9

இரத்தினக்கற்களாலான நாற்காலியை இரத்தின புரியிலிருந்து பண்டைய நாகதீப ரஜமகா விகாரைக்குக் காணிக்கையாகக் கொண்டுவரும் மத விழா, கடந்த 3ஆம் திகதி இரத ஊர்வலத்துடன் ஆரம்பமாகியது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கப்பல்மூலம் இரத்தின நாற்காலி கொண்டுவரப்பட்டு நாகதீப விகாரையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த நாற்காலியை சிறப்புப் பாதுகாப்பின்கீழ் ஒரு சிறப்பு அறையில் வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இரத்தினபுரி இரத்தின வியாபாரிகளின் 'மினி தானா அறக்கட்டளை' மூலம் இந்த நாற்காலி வழங்கப்பட்டுள்ளது. (ச-41-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

எந்த சூழ்நிலையிலும் மற்றவருக்கு நீ தாழ்ந்து விடாதே. அவ்வாறு தாழ்வது அவமானத்துக்குரியதாகும்

– பாரதியார் –

## செம்மணிப்புதைகுழி: குற்றவாளிகள் தப்பக்கூடாது

செம்மணிப்புதைகுழி விவகாரம் மீண்டும் விஸ்வரூபமெடுத்திருக்கிறது. ஒரு என்புசிதிலம்தான் இந்தப் புதிய மனிதப்புதைகுழியைக் காட்டிக்கொடுத்திருந்தது. அப்போது இந்தப் புதைகுழிக்குள் இவ்வளவு மனிதச் சிதிலங்கள் கிடைக்குமென எவரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். மிஞ்சிப் போனால் நாலைந்து எலும்புக்கூடுகள் தான் மீட்கப்படுமென்றே பலரும் எண்ணியிருக்க, தோண்டத் தோண்ட சடலங்களாக வந்துகொண்டேயிருக்கின்றன. தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள அகழ்வுப்பணிகள் மீளவும் முழுவீச்சில் 45 நாள்களுக்கு நடக்கும்போது, இன்னும் பல பயங்கரங்களைச் சொல்லும் வகையிலான எலும்புக்கூடுகள் மீட்கப்படுவதற்கான ஏதுநிலைகளே அதிகம். இந்தப் புதைகுழியைவிட, இதற்குச் சமாந்தரமாக இன்னொரு புதைகுழியும் இருப்பதற்கான தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அதையும் அகழ்ந்தால், யாழ்.குடாநாடு இருண்ட யுகத்துக்குள் இருந்தபோது நிகழ்ந்த பல சாவுகள் பற்றிய மர்மமுடிச்சுகள் அவிழ்க்கப்படக்கூடும்.

யாழ்ப்பாணத்தை விடுதலைப்புலிகளிடமிருந்து படைத்தரப்புக் கைப்பற்றிய பின்னர், இங்கு முற்றுமுழுதாக இராணுவ ஆட்சியே நடந்தது. என்னதான் மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், திணைக்களங்கள் என்பன இயங்கினாலும், அவற்றின் சூத்திரக்கயிறு படையினர் வசமே இருந்தது. படையினர் வைத்ததே சட்டம், அவர்கள் சொல்வதே அரச ஆணை என்பதாகவே சில வருடங்கள் குடாநாட்டின் நிலைமை இருந்தது. அப்போது பொலிஸ் நிலையங்கள்கூட அங்கொன்றும் இங்கொன்றுமாகவே இருந்தன. பொலிஸார் கூட படையினரின் உத்தரவுப்படியே இயங்கமுடிந்தது. அப்படிப்பட்ட இருண்டயுகத்தில்தான், பலர் காணாமற்போயினர். அதுவும் குடும்பம்,குடும்பமாக ஒரு சங்கிலித் தொடராக அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்களைப் பிடித்ததும், இழுத்துச் சென்றதும், சித்திரவதை செய்ததும்,கொன்று புதைத்ததும் படையினர்தான். ஆனால் அதை யாரிடம் சொல்லி மக்கள் நீதி கேட்க முடியும்? என்றாலும், கிருஷாந்தி படுகொலை விவகாரம் படைத்தரப்பின் இந்தக் கொலைவேட்டைக்கு ஆப்புவைத்தது. அந்தப் படுகொலைவழக்கின் பிரதான குற்றவாளியாகத் தீர்ப்பிடப்பட்ட சோமரத்ன ராஜபக்ச, திடுக்கிடும் பல உண்மைகளை நீதிமன்றில் வெளியிட்டிருந்தார். சுமார் நானூறுக்கும் மேற்பட்ட தமிழ்மக்களின் சடலங்கள் செம்மணிக்குள் வெவ்வேறு இடங்களில் புதைக்கப்பட்டதாகவும், தன்னால் இருபதுக்கும் மேற்பட்ட இடங்களைக் காட்ட முடியும் என்றும், அந்த உடலங்கள் மேலதிகாரிகளால் அனுப்பப்பட்டு தங்களால் புதைக்கப்பட்டதாகவும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருந்தார். ஆனால், என்ன காரணத்தாலோ அவர் குறிப்பிட்ட ஏனைய இடங்களில் அகழ்வாய்வுப்பணிகள் அப்போது மேற்கொள்ளப்படவில்லை. அரசாங்கமே திட்டமிட்டு அந்தப் புதைகுழிகளை தோண்டாமல் தவிர்த்திருக்கவேண்டும். ஏனெனில் செம்மணி விவகாரம் அப்போது ஆட்சியில் இருந்த சந்திரிகா அரசாங்கத்துக்கு சர்வதேசரீதியில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியிருந்தது. மேலும் அங்கு அகழ்வு செய்தால், இன்னும் அதிக சடலங்கள் மீட்கப்பட்டால், அது நிலைமையை மோசமாக்கும் என்ற காரணத்தால் செம்மணி விவகாரத்துக்கு அத்தோடு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது அரசாங்கம்.

ஆனால் என்னதான் செய்தாலும், உண்மைகள் உறங்குவதில்லை. என்றோ ஒருநாள் அது வெளிப்படத்தானே செய்யும். அப்படித்தான் இப்போது மீண்டும் செம்மணிப்புதைகுழி வெளியில் வந்திருக்கிறது. இந்தப் புதைகுழியில் மீட்கப்பட்ட சடலங்களைப் பார்க்கும்போதே, அவர்களுக்கு எவ்வகையான கொடூரங்கள் நேர்ந்திருக்கிறன என்பது தெரிகின்றது. சிறுகுழந்தையைக்கூட கொன்று புதைத்திருக்கும் கொடுமையை எல்லாம் இந்தப் புதைகுழி இவ்வளவுநாளும் மறைத்து வைத்திருந்திருக்கிறது. இங்கு இன்னொரு மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட விடயமும் உண்டு. கிருஷாந்தி கொலைவழக்குக் குற்றவாளிகள், தமது மேலதிகாரிகள் சிலரது பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களே சடலங்களை அனுப்புவார்கள் எனவும்,அந்தச் சடலங்களைப் புதைப்பது மட்டுமேதான் தாங்கள் என்றும் சொல்லி இருந்தார்கள். ஆனால் அந்த மேலதிகாரிகள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே எப்படி செம்மணிப்புதைகுழி மீளவும் அகழப்படுகின்றதோ அதேபோன்று இந்தப் புதைகுழி வழக்கையும் மீண்டும் முதலில்இருந்து ஆரம்பித்து, இதில் தொடர்புடைய சகலரும் தண்டிக்கப்படவேண்டும். அதற்காகத்தான் இத்தனை வருடங்கள் கழித்து செம்மணிப் புதைகுழிக்குள் உறங்கிய சடலங்கள் மீளவும் வெளிப்பட்டிருகின்றனபோலும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொதுமன்னிப்பில் முறைகேடா? உள்ளக விசாரணைகள் ஆரம்பம்

நீதியமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 9

**ஜனாதிபதி பொதுமன்னிப்பு அளித்துள்ளவர்களின் பட்டியலில் முறைகேடுகள் இடம்பெற்றனவா என்பது தொடர்பில் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் கடந்த மே மாதம் 2 ஆம் திகதியன்று தண்டனைச் சட்டக்கோவை 386 பிரிவின் பிரகாரம் அதுல சேனாரத்ன என்பவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நபருக்கு வெசாக் தினத்தன்று ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தால் மே மாதம் 2ஆம் திகதி சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நபருக்கு மே மாதம் 12 ஆம் திகதியன்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொதுமன்னிப்பு வழங்கியுள்ளமை பாரதூரமான விடயமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பில் நீதியமைச்சரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த விடயம் சம்பந்தமாக நாம் உள்ளக விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். இதனைவிடவும் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஜனாதிபதி செயலகமும் முறைப்பாடு செய்துள்ளது. ஆகவே விரைவில் ஆராய்ந்து உண்மையை வெளிப்படுத்துவோம் - என்றார். (ச-இ)



## 60,000 தொன் சீனி பதுக்கல்

கொழும்பு, ஜூன் 9

சீனிக்கான இறக்குமதி வரியை அதிகரிப்பதற்கு அரசுமுடிவெடுத்திருப்பதால் சீனி மாபியாக்கள் அதை அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த வகையில்,60 ஆயிரம்மெற்றிக்தொன் சீனியை பதுக்கிவைத்து அதிக விலைக்கு விற்பதற்கு சீனி இறக்குமதியாளர்கள் தீர்மானித்துள்ளனர் என்று புறக்கோட்டை மொத்த வியாபாரிகள் சங்கத் தகவல் கூறுகிறது. இறக்குமதி செய்யப்படும் சீனிக்கான வரியை 30 ரூபாவால் அதிகரிப்பதற்கு திறைசேரி தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## பதவி விலகாத முப்படையினர் 3000 பேர் கைது

முறையாகப் பதவிவிலகாது பணிக்கு சமூகமளிக்கத் தவறிய முப்படையைச் சேர்ந்த 3 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் முப்படைகளும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களில் 2,261 பேர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முப்படைகளின் ஒழுக்கத்தை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## நீரில் மூழ்கி நால்வர் பலி

பொலநறுவை, அரலகங்விலப் பகுதியில் உள்ள ஏரியில் மூழ்கி நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். பலஎல்ல ஏரியில் குளிக்கச் சென்ற நான்கு பேரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம்தொடர்பில்அரலகங்விலப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)



## சிமெந்து விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 9

50 கிலோகிராம் சிமெந்து மூடையின் விலையை அதிகரிக்க சிமெந்து நிறுவனங்கள் முடிவுசெய்துள்ளன.

நேற்றுமுன்தினம் முதல் இந்த விலை உயர்வு நடைமுறைக்கு வந்துள்ளது. அதன்படி, 50 கிலோ சிமெந்து மூடையின் மொத்த விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று சிமெந்து நிறுன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 50 கிலோகிராம் சிமெந்து மூடையின் மொத்த விலை அதிகரிக்கப்பட்டாலும், சில்லறை விலையில் எந்தத் திருத்தமும் செய்யப்படவில்லை. சிமெந்து உற்பத்திச் செலவுகள் அதிகரித்ததே சிமெந்து விலை உயர்வுக்கு வழிவகுத்ததாக சிமெந்து நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரங்களைக் குறைப்பதற்குச் சதி!

முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூன் 9**

**நாட்டின் சுயாதீன திணைக்களங்களில் ஒன்றான, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவை முழுமையாகப் பலவீனப்படுத்தி, ஆணைக்குழுவின் அதிகாரங்களை நிதியமைச்சு மற்றும் வலுசக்தி அமைச்சுக்கு மாற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள மின்சாரசபை (திருத்தச்) சட்டமூலத்தில் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவை முழுமையாகப் பலவீனப்படுத்தும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆணைக்குழுவின் அதிகாரங்களை நிதியமைச்சு மற்றும் வலுசக்தி அமைச்சுக்குப் பொறுப்பாக்கும் முயற்சிகள் இந்த சட்டமூலத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்கட்டணத் தீர்மானத் தில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுயாதீன தலையீடு தடுக்கப்பட்டுள்ளது. இது மிகப் பெரிய தவறாகும்.

தற்போது மின்கட்டணத் திருத்தத்துக்கு இலங்கை மின்சாரசபை முன்வைத்துள்ள வருமான விவரங்களில் வரவுக்கும், செலவுக்கும் இடையில் பெரியளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. கடந்த ஆறு மாத காலப்பகுதியில் இலங்கை மின்சாரசபை அதிகளவில் இலாபமடைந்துள்ள நிலையில், முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளில் பல குளறுபடிகள் காணப்படுகின்றன. இவை குறித்து பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு விசேட கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ம-இ)



## இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 50 கிலோ கஞ்சா இராமேஸ்வரத்தில் மீட்பு

இந்தியா, ஜூன் 9

சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக இலங்கைக்குக் கடத்துவதற்காக இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகம் அருகே உள்ள கடற்கரையில் காரொன்றில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 10 இலட்சம் ரூபா இந்திய மதிப்பிலான 50 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இராமேஸ்வரம் மாவட்டப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து சேராங்கோட்டை வரை கடற்கரை பகுதியில் திடீர் ரோந்து பணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது மீன்பிடித் துறைமுகம் அருகே சந்தேகத்துக்கிடமான கார் ஒன்றிலிருந்து ஒருவர் பெரிய பை ஒன்றை எடுத்து நாட்டுப்படகில் ஏற்றுவதற்காக கடற்கரைக்கு கொண்டு சென்றதையடுத்து பொலிஸார் அவதானித்தனர். அந்த நபரை மடக்கிப்பிடித்த போது காரில் கஞ்சா மூடைகள் இருந்தமை தெரியவந்தது. இதையடுத்து கஞ்சா மூடைகள், கடத்தலுக்குப் பயன்படுத்திய கார் ஆகியவற்றுடன் காரில் இருந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் கஞ்சா மூடைகள் படகில் இலங்கைக்குக் கடத்திச் செல்வதற்காக கொண்டுவரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-56)

## துப்பாக்கிகள், ரவைகள் வவுனியாவில் மீட்பு



வவுனியா, ஜூன் 9

வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் காணியொன்றிலிருந்து பழுதடைந்த நிலையில் இரு துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. நேற்றுக் காலை குறித்த காணியில் புனரமைப்புப் பணிகள் உரிமையாளர்களால் மேற்கொள்ள மண் அகழப்பட்டது. இதன்போது மண்ணில் புதையுண்ட நிலையில் காணப்பட்ட இரண்டு ரி-56 ரக துப்பாக்கிகள் மற்றும் அதற்குப் பயன்படும் ரவைகள் தென்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக வவுனியாப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்குவிரைந்தபொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் ஆயுதங்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை குறித்த பகுதியில் 1985 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இந்திய இராணுவத்தின் முகாம் ஒன்று இயங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-110)

## வற்றாப்பளைப் பொங்கல் போக்குவரத்து ஒழுங்குகள்

வரலாற்றுப் பிரசித்திபெற்ற முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் உற்சவம் இன்று திங்கட்கிழமை வெகுவிமர்சையாக இடம்பெறவுள்ள நிலையில் பக்தர்களின் சீரான போக்குவரத்தை உறுதி செய்யும் வகையில் போக்குவரத்து முகாமைத்து வத் திட்டம் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப்பிரிவு இது தொடர்பில் விடுத்துள்ள பொது அறிவிப்பில், பிரதான நுழைவுப் பாதையூடாக வற்றாப்பளை கோயில் பகுதிக்குள் நுழையும் அனைத்து வாகனங்களும் முல்லைத்தீவு - மாங்குளம் சாலையில் 3ஆவது மைல்கல் சந்தியைப் பயன்படுத்தவேண்டும். இந்தச் சந்தி கோயில் வளாகத்துக்கு வரும் அனைத்துப் போக்குவரத்திற்கும் முதன்மை நுழைவுப் பாதையாகச் செயற்படும். வெளியேறும்பாதை-கோயில் தரிப்பிடத்திலிருந்து, வாகனங்கள் வற்றாப்பளை சலூன் சந்தி வழியாக வெளியேறி, வற்றாப்பளை முள்ளியவளை சாலை வழியாக சந்தியம்மன் சந்தி முல்லைத்தீவு மாங்குளம் சாலையில் செல்லவேண்டும். கேப்பாபிலவு சாலை வழியாக வெளியேறும் வாகனங்கள் சலூன் சந்தி வழியாகவும் வெளியேறலாம். புதுக்குடியிருப்பிலிருந்து கேப்பாபிலவு சாலை வழியாக பயணிக்கும் பக்தர்களுக்கான சிறப்பு அறிவிப்பு புதுக்குடியிருப்பி லிருந்து கேப்பாபிலவு சாலை வழியாக பயணிக்கத் திட்டமிடும் பக்தர்கள் முல்லைத்தீவு பிரதான சாலையைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-41-100)



## இளைஞர் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9

தவறான முடிவு எடுத்து தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.


இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடைக்குறிச்சி வரணிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இடைக்குறிச்சி மேற்கு வரணியைச் சேர்ந்த ரமேஸ் பிரவீன் (வயது-18) என்பவரே உயிரிழந்தவராவார். சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பணிப்பின் பிரகாரம் சாவகச்சேரிப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சி.சி. இளங்கீரன் விசாரணையை மேற்கொண்ட பின்னர் சாவகச்சேரி சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-159)

## வடக்கு – கிழக்கை இணைக்கும் வீதியை சீரமைத்துத் தாருங்கள்

மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 9

வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைக்கும் முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களுக்கிடையேயான சிங்கபுரம் தென்னைமரவாடி வீதியைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். வீதியானது சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கும் மேலாக குண்டும் குழியுமாக காணப்படுகின்றது. குறித்த வீதியால் திருகோணமலை நோக்கிப் பயணிக்கும் பயணிகள் பேருந்திலிருந்து இறங்கி நடந்து சென்று பயணிக்க வேண்டியுள்ளது. எனவே குறித்த கிரவல் வீதியை தற்காலிகமாகவேனும் புனரமைத்துத்தருவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை



விடுத்தனர். இதுதொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் உமாமகேஸ்வரன் தெரிவிக்கையில், குறித்த வீதி [illegible] இணைப்பு வீதியாகக் காணப்படுகின்றது. இது குறித்து திருகோணமலை மாவட்டச்செயலாளரிடம் நாம் ஏற்கனவே அறிவித்துள்ளோம்-என்றார். (ச-41-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாவியில் மூழ்கி நால்வர் மரணம்

கொழும்பு, ஜூன் 9
பொலன்னறுவை மாவட்டத்துக்குட்பட்ட திம்புலாகல எல்லவெவ வாவியில் மூழ்கி நால்வர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். தாய், மகள் மற்றும் இளம் தம்பதி யினர் ஆகியோரே உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, இரத்மலானை பகுதியைச் சேர்ந்தவர்கள் நேற்று காலை தமது உறவினர்களின் வீட்டுக்கு சென்றுள்ளனர். அவர்கள் எல்லவெவ வாவியில் நீராடிய போது ஆணொருவர் நீரில் மூழ்கியுள் ளார். அவரைக் காப்பாற்றுவதற்கு முற்பட்டவேளையே ஏனையோரும் மூழ்கியுள்ளனர்.

30 வயது தாய், 13 வயது மகள், மற்றும் 27 வயது கணவரும், 25 வயது மனைவியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். ஒருவர் பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(எ-44)



# வாள்வெட்டுத் தாக்குதலில் யாழ்.நகரில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ். நகர பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள உணவகம் ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த வாள்வெட்டுத் தாக்குதலில் இருவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடை ஊழியர்களுக்கும், அங்கு வந்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்த இருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(எ-22)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
**தர்மராஜா ஸ்ரீமுரளி**
அவர்களின் பாசமிகு மாமியார்
**நடராசா மகேஸ்வரி**
அவர்கள் இறைபதம்
அடைந்த செய்தி கேட்டு
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்

யா/ புன்னாலைக்கட்டுவன் இந்து தமிழ் கலவன் பாடசாலை
ஆசிரியர் நலன்புரிக்கழகம்

## ஆறாம் ஆண்டு நினைந்துருகல்

பிறப்பு
14
11
1948



இறப்பு
15
06
2019

அமரர் திருமதி
**சறோஜினிதேவி கோபாலபிள்ளை**
திதி: வைகாசித் திங்கள் பூர்வ பக்க சதுர்த்தசி (09.06.2025)

அம்மா எங்கள் அன்புத் தெய்வமே !
நீங்கள் புரண்டு படுத்தால்,
நாம் இறந்து விடுவோமோ என்று,
தூக்கத்தை கூட தொலைத்துவிட்டு,
உங்கள் கருவில் இருந்த நமக்காக,
இரவில் விழித்திருந்த சூரியன் - அம்மா.

அம்மாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல (யாழ் அரசடி, பண்டாரகுளம்) பிள்ளையாரையும், நயினை நாகபூசணி அம்மனையும், நல்லூரானையும் பிரார்த்திக்கின்றோம்.

2/1,மூர்த்தவிநாயகர்வீதி.
அடுக்காயடிலேன்.
நல்லூர்,

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள்

(CS 58505) E-1

## காற்றோடு கலந்த கண்ணீர் துளிகளுடன் 9ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
20
10
1950



இறைவன் அடியில்
19
05
2016

**அமரர் கணேஸ்வரி நாகரத்தினம் (தேவி)**
திதி - திரயோதசி (09.06.2025)

ஆண்டுகள் ஒன்பதாகியது அம்மாவைப் பிரிந்து . . . !
வையகம் போற்ற வாழ்ந்து
வானுறையும் தெய்வமதாய்
இயற்கையில் இணைந்து
பழுதில்லாப் புதுமலராய் - என்றும்
எம் இதயங்களில் மணம் வீசும் அன்பு நிறை அம்மாவே!
ஆண்டுகள் ஒன்பது ஆனதே பிரிந்து
உயர் குணமேவிய திருவுருவாய் வழிகாட்டி
நிலவொளியாய் குளிர்மை தந்து - தினம்
எமையெல்லாம் மனதாற்றி
அகவொளியாய் நிறைமதியாய்
குறை நிறைகள் எடுத்தியம்பி
நல்வழிகாட்டிய உம் கருணையினை
பேறாகப் பெற்றோம் பெருமை கொண்டோம் . . . !
நீறாகிப் போனாலும் நீங்களே திசைகாட்டி
நித்திய வாழ்வினில் நீங்கா நிறையுரு ...
அணையாது ஒருபோதும்
நாம் கொண்ட பாசம் . . .
தேயாமல் வளருமிது தெய்வீக பாசம் . . . !
இயற்கையின் அசைவுகளில் - உம்
உணர்வுகளை நுகர்ந்து
உம் பாதம் மலர் தூவி வணங்குகின்றோம்!

தொம்பை வீதி,
உடுவில் கிழக்கு
சுன்னாகம்

என்றும் நினைவுகளை சுமந்து நிற்கும்,
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(CS 3283) E-1

# INVITATION FOR BIDS (IFB)

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
2. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025.06.09 until 2025.06.23 from 09:00 hrs to 15:00 hrs.
3. Qualification requirements are indicated in Section 4 of the Procurement document. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of road construction/Building construction for grade mentioned in the table below.
"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam West Pradeshiya Sabha, Chulipuraam (T.P No: 021 225 0144, Fax No: 021 225 0144) during the period from 2025.06.09 until 2025.06.23 from 09:00 hrs to 15:00 hrs. upon payment of a non-refundable fee as mentioned in the table. The method of payment will be by cash
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Procurement Committee, Valikamam West Pradeshiya Sabha, Chulipuraam at or before 10.00 hrs, 2025.06.24 Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend
7. Pre-Bid Conference will be held at Head office, Valikamam West Pradeshiya Sabha, Chulipuraam commencing at 10.00 am on 2025.06.16
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 2025.06.09 until 2025.06.23 | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.00 A.M on 2025.06.16 | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.00A.M on 2025.06.24 | | | | |
| S No | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee | Validity Period days | Bid Validity Date | Required Bid Security | |
| | | | | | | | | Bid Security Amount | Bid Security Validity Date |
| 01 | Reconstruction of Kallaivempady Road NP/14/41(17)/2/PSDG/01/2025 | 6.584 | 84 Days | C8& Above Ro ads ( Culvert & Retaining wall) | 3000.00 | 77 days | 09.09.2025 | 66,000.00 | 07.10.2025 |


Chairman,
Procurement Committee
Valikamam West Pradeshiya Sabha, Chulipuram
2025.06.09

(CR 45298) E-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 08 . 1948



மறைவு
07 . 06 . 2025

## தம்பு இந்திரசாமி

இலங்கை சித்திரமேழியை பிறப்பிடமாகவும், அவுஸ்ரேலியா - Canberra வை வதிவிடமாகவும் கொண்ட தம்பு இந்திரசாமி (முன்னாள் அரசாங்க நிர்வாக அலுவலர் - நல்லூர், முன்னாள் ஆசிரியர் - மன்னார் பெரியமடு) அவர்கள் (07.06.2025) சனிக்கிழமை இலங்கை - யாழ்ப்பாணத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான தம்பு - செல்லம்மா தம்பதியரின் மகனும், காலம்சென்றவர்களான இரத்தினசிங்கம் - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், காலம் சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் மகேஸ்வரி, காலம்சென்றவர்களான குமாரசாமி, மகாதேவன் ஆகியோரின் அன்புச்சகோதரரும், சரோஜா (அவுஸ்ரேலியா-Canberra), அவர்களின் அன்புக்கணவரும், ஹேமா (அவுஸ்ரேலியா-Canberra), ரேகா (அவுஸ்ரேலியா-Adelaide) ஆகியோரின் அன்புத்தந்தையும், செந்தூரன் (அவுஸ்ரேலியா) அவர்களின் மாமனாரும், காலம்சென்ற சிதம்பரப்பிள்ளை சின்னையா அவர்களின் மைத்துனரும், கோமதி (இலங்கை), பாணுமதி (கனடா), வளர்மதி (அவுஸ்ரேலியா), சண்முகதாசன் (லண்டன்), அழகுமதி (இலங்கை) ஆகியோரின் தாய்மாமனாரும், சேயோன் (இலங்கை), சுபிந்தன் (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும் தரணியா, ஹரேஷன், அஞ்சலி, ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுழிபுரம் பொன்னாலையில் உள்ள இல்லத்தில் இன்று (09.06.2025) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று மதியம் 12.00 மணிக்கு தகனத்திற்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**தகவல் :**
**சரோஜா (மனைவி)**
**ஹேமா (மகள்), ரேகா (மகள்)**

**பொன்னாலை கிருஷ்ணன் கோவில் வீதி,**
**சுழிபுரம்.**

# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு.றொ.கி.அபிஷேகன் அவர்களின்
அன்புத் தந்தை
**அமரர்.திரு.றொபின்சன் கிறிஸ்ரி யோசப்**
அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.
அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**புனித பத்திரியார் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு. றொ. கி அபிஷேகன் அவர்களின்
அன்புத் தந்தை
அமரர் **திரு. றொபின்சன் கிறிஸ்ரி யோசப்** அவர்களின்
பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை
அடைகின்றோம்.
அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதுடன். அன்னாரின்
ஆத்மா இறைவனில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் சங்கம்**
**புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்.**

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
20 . 04 . 1962



விண்ணில்
06 . 06 . 2023

## சந்தியாப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் ஜோசப் மனோகரன்

ஆண்டு இரண்டு கடந்தாலும் உம்நினைவுகள்
எம்மை விட்டு போவதில்லை
இவ்வுலகில் நீர் செய்த நன்மைகள் எல்லாம்
எம்மால் மறக்க முடியாமல் வாழும்
உம் அன்பு மனைவி பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்
என்றும் உம் நினைவில்.

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**

**077 977 9706**

(CS/3359) D*

## ஒரேநாளில் 488 பேர் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப் பொருள்களுடன் 488 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலைப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.


விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது ஹெரோய்ன் போதைப்பொருளுடன் 134 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 183 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 156 பேரும், ஹேஷ் போதைப் பொருளுடன் 6 பேரும், கஞ்சாச் செடிகளுடன் 3 பேரும், போதை மாத்திரைகளுடன் 6 பேரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

(ச-இ)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 08 . 1960



மறைவு
07 . 06 . 2025

## விஸ்வலிங்கம் சூரியகுமார் (சூரி)

திருநெல்வேலி பத்திரகாளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் சூரியகுமார் (சூரி) அவர்கள் நேற்று முன்தினம் (07.06.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்-தங்கரத்தினம் தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம்-மகேஸ்வரி தம்பதியின் அன்பு மருமகனும், மகாலட்சுமி அவர்களின் அன்பு கணவரும், சர்மிளா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை-முல்லைத்தீவு), காலஞ்சென்ற சகானா மற்றும் மதுக்சனா (நுண் கலைப்பீடம், யாழ்- பல்கலைகழகம்), மதுக்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகுமார், விஜயராணி, இரத்தினகுமார், காலஞ்சென்றவர்களான சந்திரகுமார், சிறீதரன், மற்றும் சத்தியலிங்கம், காலஞ்சென்ற தியாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கனகராஜா (வர்ணவாரிதி) மற்றும் கேதீஸ்வரன், சரோஜினிதேவி, ஜெயசீலன், காலஞ்சென்ற மங்கையற்கரசி மற்றும் மங்களேஸ்வரி, நித்தியானந்தன் (சிரேஸ்ட கலாச்சார உத்தியோகத்தர்-மன்னார்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.06.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வெலி பால்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**076 025 1321**
**071 962 3296**

**அம்மன் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு**

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 08 . 1950



மறைவு
08 . 06 . 2025

## திருமதி ஜெயரட்ணம் நவமணி

லோட்டன் வீதி மானிப்பாயைச் சேர்ந்த ஜெயரட்ணம் நவமணி அவர்கள் நேற்று (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - அன்னபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தவமணி, பாலசுந்தரம், கதரவேலு மற்றும் லக்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரியும், ஆனந்தி (பிரதிப்பதிவாளர் நாயகம் வடமாகாணம்), தயாபரன் (ஆசிரியர் - யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி) காலஞ்சென்ற தர்சினி (ஆசிரியர்) மற்றும் கிரிதரன் (UK), ஜனனி (CMA சாவகச்சேரி நீதிமன்றம்), விஜயந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், மிதிலா (ஆசிரியர்), கதிஜா, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு மாமியும் பிருத்விஜனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 620 4710**

**லோட்டன் வீதி,**
**மானிப்பாய்**

(CS 58520) E-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களின் நம்பிக்கையை அரசாங்கம் பாதுகாக்கவேண்டும்

## மஸ்தான் எம்.பி. சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூன் 9**

**வடக்கு மக்கள் பெரும்பான்மைக் கட்சிகளுக்கு வாக்களிப்பது மிகவும் அரிதானதாகும். ஆனால் தங்கள் பிரதேசங்கள் அபிவிருத்திசெய்யப்படும் என்ற நம்பிக்கையிலேயே தற்போது மக்கள் அரசாங்கத்துக்கு வாக்களித்துள்ளனர். அரசாங்கம் அந்த மக்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கவேண்டும்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் அபிவிருத்திக்கு போக்குவரத்து வசதிகள் மிகவும் அவசியமாகும். வடக்கில் போக்குவரத்து சேவைகள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. அதற்கு மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் வீதிகளும் காரணமாகும். இந்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாண அபிவிருத்திக்காக 5 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டமைக்கு அரசாங்கத்துக்கு நன்றி கூறுகிறேன். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 50,60 கிலோமீற்றர் தூரத்துக்கு வீதிகளை காப்பெற்களாக அபிவிருத்தி செய்ய எங்களால் முடிந்தது. ஆயினும் அதிக வீதி அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடியும் இதற்குக் காரணமாக இருக்கலாம். தற்போது அரசாங்கம் ஒதுக்கியிருக்கும் நிதியில் இந்த வேலைகளைப் பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (எ-இ)

# இனமுரண்பாட்டைத் தூண்டும் அர்ச்சுனாவின் கருத்துகள்

## சரத் வீரசேகர தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 9

விடுதலைப்புலிகள் அமைப்பைக் குறுகிய அரசியல் நோக்கத்துக்காகவும், பிரபல்யத்துக்காகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா பயன்படுத்திக்கொள்வது தெளிவாக விளங்குகிறது. அர்ச்சுனாவின் முறையற்ற கருத்துகள் வடக்கு காணி விடுவிப்பு மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியற் கைதிகள் விடுவிப்புக்கு தடையாக அமையலாம்.

- இவ்வாறு முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனின் கருத்துகள் மற்றும் செயற்பாடுகள் வடக்குக்கும், தெற்குக்கும் இடையில் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்தும் வகையில் உள்ளன. பிரபாகரன் தமது தேசியத் தலைவர் என்று குறிப்பிட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார். இது அரசியலமைப்புக்கு முற்றிலும் விரோதமானது.

300 கொள்கலன்களில் பிரபாகரனின் ஆயுதங்கள் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், தமிழ் புலம்பெயரிகளிடமிருந்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நிதி பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதன் உண்மைத்தன்மை என்னவென்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். நகத்தால் கிள்ளியெறிய வேண்டியதை கோடரியால் வெட்டி வீழ்த்தும் நிலையை அரசாங்கம் உருவாக்கக்கூடாது-என்றார். (ச-இ)

கிளிநொச்சி மகாவித்தியாலய சாரணிய மாணவர்களின் ஏற்பாட்டில் உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி கடந்த வியாழக்கிழமை சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது. குறித்த சிரமதானப்பணியை கிளிநொச்சி தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர், கரைச்சிப் பிரதேசசபைத் தவிசாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்தனர். ஏ-9 வீதியின் மருத்துவமனை முதல் பசுமைப்பூங்கா வரை சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது. (ச-41-113)



# மாற்றுத்திறனாளிகளுக்கு ரயில் பயணத்தில் விசேட வசதிகள்

கொழும்பு, ஜூன் 9

ரயில் பயணத்தின்போது மாற்றுத்திறனாளிகளுக்கு விசேட வசதிகளை வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

ரயில்களில் ஏறும்போதும், இறங்கும் போதும் பணியாளர்களிடமிருந்து உதவிபெறும் வாய்ப்புக் கிடைக்கும் என ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக ஜெயசுந்தர தெரிவித்தார்.

தேவையுடையோர் 1971 என்ற தொலைபேசி எண்ணுக்கு அழைப்பை ஏற்படுத்தி முன்கூட்டியே அறிவிக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படும் என ரயில்வே பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# பொதுமன்னிப்பில் கைதி விடுதலை சிறைக் கண்காணிப்பாளர் கைது!



கொழும்பு, ஜூன் 9

ஜனாதிபதியின் பொது மன்னிப்பைப் பயன்படுத்தி கைதி ஒருவரை முறைகேடாக விடுவித்த விவகாரத்தில் அநுராதபுரம் சிறைச்சாலைக் கண்காணிப்பாளர் குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட அதனுடன் தொடர்புடைய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

# பெருநாள் தொழுகை



வவுனியா, ஜூன் 9

வவுனியா தவ்ஹீத் ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் புனித ஹஜ்பெருநாள்தில்தொழுகை பட்டாணிச்சூரின் வேப்பங்குள வீதியில் நடைபெற்றது. ஜமாஅத்தின் தலைவர் அஷ்ஷெய்க் ஸாதிகீன்(பாரி) யினால் தொழுகை நடத்தப்பட்டதுடன் இஸ்லாமியர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ச-41-110)

மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் சர்வ தேச சூழல் தினமும், சர்வ தேச நீர் தினப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவிகள் கௌரவிப்பும் கல்லூரியின் பிரதி முதல்வர் ச.தயாளன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச-25, 125,66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய...

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
எதிர்காலத்தில் கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடு செய்ய பல இந்திய நிறுவனங்களை ஊக்குவிக்க எதிர்பார்க்கின்றேன். இது இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் ஒரு படியாகும். இது ஒத்துழைப்பை மேம்படுத்த உதவும். இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் உறுதியான நிலையை அடையும்போது அதனூடாக அதிக இந்திய முதலீடுகளை ஈர்க்கமுடியும். அசைக்கமுடியாத அர்ப்பணிப்புடன் இந்தியா, இலங்கையை ஆதரிக்கின்றது - என்றார். (அ-எ-இ)

## அர்ப்பணிப்புடன்...

உயிர் அபாய நிலையில் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவரை அங்குள்ள மருத்துவக் குழுவினர் அயராது கடும் முயற்சி மேற்கொண்டு காப்பாற்றியுள்ளனர்.
கடந்த மே மாதம் 24ஆம் திகதி மின் அதிர்ச்சிக்கு உள்ளாகி உயிராபத்தான நிலையில் பலாலியில் கடமையாற்றும் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சுயநினைவற்ற நிலையில் கடும் உயிர் அபாய நிலைமையில் சேர்க்கப்பட்ட இவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனையின் மருத்துவக் குழு விரைவாக நடவடிக்கை மேற்கொண்டதுடன், 45 நிமிடங்கள் தொடர்ந்து மேம்பட்ட உயிர்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. கடும் முயற்சியின் பின்னர் அவரது உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது.
தெல்லிப்பழை மருத்துவமனை மருத்துவக் குழுவின் இந்த அர்ப்பணிப்பான முயற்சிக்கு இலங்கை இராணுவ மருத்துவக் குழுவின் 4 ஆவது பட்டாலியன் (பலாலி) நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துள்ளது.
உயர்தரமான அர்ப்பணிப்பு, திறமை மற்றும் குழு உழைப்பின் மூலம் மூன்று பிள்ளைகளின் தந்தையும், இராணுவத்தின் உறுப்பினர் ஒருவரின் மதிப்புமிக்க உயிர் காப்பற்றப்பட்டுள்ளது. பிரிகேட் மருத்துவ ஊழியர்களுடன் நீங்கள் காட்டிய இணக்கமான ஒருங்கிணைப்பு மற்றும் பாதிக்கப்பட்டவரைக் காப்பாற்றுவதற்காக காட்டிய பற்றுறுதி ஆகியவற்றுக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக உள்ளோம். உயிர் காப்பு மற்றும் அதற்குப் பிந்தைய பராமரிப்பின் தரம், தெலிப்பழை அடிப்படை மருத்துவமனையின் மருத்துவ சிறப்பு மற்றும் அன்பான பராமரிப்பின் சான்றாக உள்ளது.
இந்த முக்கியமான நிகழ்வில் ஈடுபட்ட உங்கள் மருத்துவ மற்றும் தாதியர் குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி மற்றும் பாராட்டுகளைத் தெரிவிக்கவும். எங்கள் சேவை பணியாளர்களின் ஆரோக்கியம் மற்றும் உயிரைப் பாதுகாப்பதில் உங்கள் தொடர்ந்த ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்கு ஸ்ரீலங்கா இராணுவ மருத்துவக் குழு எப்போதும் நன்றியுடன் உள்ளது என்று இலங்கை இராணுவ மருத்துவக் குழுவின் 4 ஆவது பட்டாலியன் (பலாலி) விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-26)

## ஹெரோய்ன்,...

ஒருவரிடம் இருந்து 2 கிலோ 100 கிராம் கஞ்சாவும், மற்றைய நபரிடம் இருந்து 3 கிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-எ-26)

## மாகாணசபைத்...


ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கை வரவுள்ளார். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே தயான் ஜயதிலக மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் இலங்கை வருவதற்குத் தீர்மானித்திருப்பது முக்கியமானதொரு விடயம். வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல், சிவில் பிரமுகர்கள் இந்த விடயத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியமானதாகும்.
தற்போதைய நிலையில் ஆட்சியில் உள்ள அரசாங்கம் அதிகாரப்பகிர்வு தொடர்பாகவோ, பொறுப்புக்கூறல் தொடர்பாகவோ எவ்விதமான கரிசனைகளையும் கொண்டிருப்பதாக வெளிப்படுத்தவில்லை. மாகாணசபைகளுக்கான தேர்தலே அதிகாரப்பகிர்வுக்கான ஆரம்பமாக இருக்கின்றது. ஆனால் மாகாணசபைத் தேர்தலை எட்டு ஆண்டுகளாக நடத்தாது இருக்கும் நிலையே காணப்படுகின்றது.
டில்லிக்கும், கொழும்புக்கும் இடையிலான உறவுகளால் மாகாணசபைகளுக்கான வலியுறுத்தல் பிரதமர் மோடியின் பயணத்தில் காணமலாக்கப்பட்டது. இது மிகப்பாரதூரமான விடயமாகும். ஐ.நா. ஆணையாளர் இலங்கைக்கு வருகின்ற சந்தர்ப்பத்தில் இந்த நாட்டில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அரசியல் ரீதியான தீர்வுதான் அடிப்படையாக இருக்கின்றது என்பதை உணர்த்துவதோடு மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்தவதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும் என்ற கூட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டும். அதன்மூலமாகவே சுயாட்சி, அதிகாரப் பகிர்வு, பொறுப்புக்கூறல் உள்ளிட்ட தமிழ் மக்களின் நீண்டகாலக்கோரிக்கைகளை நோக்கி நகரமுடியும். இதைவிடுத்து பொறுப்புக்கூறல் விடயத்தை மட்டும் முன்வைக்கின்றபோது தென்னிலங்கையில் மீண்டும் தேசியவாத சக்திகள் தீவிரமாகத் தலையெடுக்கும். அதனால் ஐ.நா. ஆணையாளரின் வருகையை எதிர்காலத்தை மையப்படுத்தி பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கவேண்டும் - என்றார். (அ-எ-இ)


# மணிவிழா வாழ்த்து

## எங்கள் அதிபர்

## திரு.துரைராஜா யேசுதானந்தர்

Slps-1, B.Ed, Dsm, PGDEM



**சேவை விபரம்**

**15.03.1990 - 31.04.1990 மு/யோகபுரம் ம.வி (ஆசிரியர்)**

**01.05.1990 - 31.04.1995 மு/மல்லாவி ம.க (ஆசிரியர்)**

**10.05.1995 - 28.02.1999 மு/துனுக்காய் அ.த.க.பா (ஆசிரியர்)**

**01.03.1999 - 31.04.2004 மு/கரிப்பட்ட முறிப்பு அ.த.க.பா (அதிபர்)**

**01.05.2004 - 28.02.2007 மு/பாலிநகர் ம.வி (அதிபர்)**

**01.03.2007 - 10.06.2025 மு/மல்லாவி ம.க (அதிபர்)**

**எமது கல்லூரியில் கல்விப்பணியாற்றி மணிவிழாக்கண்டு பணி ஓய்வு பெறும் எங்கள் அதிபர் சீரோடும் சிறப்போடும் வாழ வாழ்த்துகின்றோம்.**

**கல்லூரிச்சமூகம்**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜெனிவா 59...

கூட்டத்தொடர் எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி ஜூலை மாதம் 9ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க்கின் உலகளாவிய மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான அறிக்கையுடன் ஜெனீவாவில் ஆரம்பமாகவிருக்கும் இந்தக் கூட்டத்தொடரின் விடயதான மற்றும் நேர ஒழுங்கு அட்டவணையில் இலங்கையுடன் தொடர்புடைய விடயங்கள் உள்வாங்கப்படவில்லை.
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரிலேயே இலங்கை தொடர்பான ஆணையாளரின் வாய்மொழிமூல அறிக்கை வெளியிடப்படவுள்ளதுடன், புதிய தீர்மானமொன்றைக் கொண்டுவருவது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.
59ஆவது கூட்டத்தொடரின் மத்தியில் எதிர்வரும் 23ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் இலங்கைக்கு உத்தியோகபூர்வப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். (அ-எ-இ)

## உள்ளகப்...

உள்ளகப் பொறிமுறையை வலுப்படுத்துவதற்கு இடமளிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் மாதப் பிரேரணை அமைய வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது. இது சம்பந்தமாக பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளுடனும் கொழும்பு பேச்சு நடத்தவுள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க், எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்பு வருகின்றார். இந்த தகவலை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளார்.
26 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கி இருக்க திட்டமிட்டுள்ள வோல்கர் டேர்க், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர், நீதி அமைச்சர் ஆகிய அரச தரப்பினருடனும் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.
இந்தக் கலந்துரையாடல்களில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைப்புக்கான ஏற்பாடு, புதிய அரசியலமைப்பு, உள்ளகப் பொறிமுறையை வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணையாளருக்கு எடுத்துரைக்கப்படவுள்ளது.
சர்வதேச விசாரணைக்கு இலங்கை உடன்படாது என்பதால் உள்ளக விசாரணைக்கு ஒத்துழைக்கும் வகையில் உதவிகள் வழங்கப்படவேண்டும் எனவும், உறுப்பு நாடுகளிடம் இது பற்றி கோரிக்கை விடுக்கப்படவேண்டும் எனவும் இலங்கை தரப்பில் கோரப்படவுள்ளது அறியமுடிகின்றது.
இலங்கை தொடர்பான புதிய பிரேரணையொன்று மனித உரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் மாத கூட்டத்தொடரில் முன்வைக்கப்படவுள்ளது. இதற்கு பிரிட்டன் தலைமை வகிக்கவுள்ள நிலையில் பிரிட்டன் உள்ளிட்ட உறுப்பு நாடுகளுடன் இலங்கை பேச்சு நடத்தவுள்ளது. நீதித்துறையின் சுயாதீனத்தன்மை, ஊழல்வாதிகளுக்கு எதிரான பாரபட்சமற்ற நடவடிக்கை என்பவற்றின் ஊடாக உள்ளக நீதிப்பொறிமுறை வலுப்படுத்தப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டப்படவுள்ளது.
இலங்கைப் பயணத்தின்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களையும் கொழும்பில் சந்திப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்க்கட்சித் தலைவர், சர்வமதத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர்கள்மற்றும்மனிதஉரிமை ஆர்வலர்கள் ஆகியோரையும் இந்தப் பயணத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.
அதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நேரில் சென்று, நிலைமைகளை ஆராய உள்ளதுடன், போரின்போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களைச் சந்திக்கவுள்ளார்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மற்றும் வடக்கு, கிழக்கு செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின்போது அவர்கள் சர்வதேச விசாரணையின் அவசியத்தை வலியுறுத்தவுள்ளனர். செம்மணி மனிதப்புதைகுழி, காணி ஆக்கிரமிப்பு, வழிபாட்டுதல ஆக்கிரமிப்பு உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் எடுத்துரைக்கவுள்ளனர்.
இலங்கைப் பயணத்தில் சந்திப்புகள் முடிவடைந்த பின்னர் கொழும்பில் ஊடக சந்திப்பொன்றையும் நடத்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் திட்டமிட்டுள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக பதவிவகித்த நவநீதம்பிள்ளை அம்மையார், இதற்கு முன்னர் இலங்கை வந்திருந்தார். அப்போது அவர் முள்ளிவாய்க்கால் செல்வதற்கு முற்பட்டார் எனவும், அந்த கோரிக்கையை மஹிந்த அரசாங்கம் நிராகரித்தது எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. (அ-எ-44)

## உள்ளூராட்சி...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் எடுக்கும் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

**பொய் சொல்லும் வழக்கமில்லை**

பொய்களைச் சொல்லும் வழக்கம் எங்களுடைய கட்சியில் இல்லை. கட்சியின் நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்திய கட்சியின் தலைவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.
ஒரு சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குக் கூடுதலான மக்கள் ஆதரவு கிடைக்கும்போது அந்த மக்கள் தீர்ப்பை மதித்து இலங்கை தமிழரசுக் கட்சி ஆட்சியமைப்பதற்கு ஆதரவளிக்கவேண்டியது ஏனைய கட்சிகளின் ஜனநாயகக் கடமை. அதை அரசியல் குழு கூட்டத்திலும் வலியுறுத்தியிருந்தோம். அதைப் பகிரங்கமாக ஏனைய கட்சிகளுக்கும் சொல்லியிருக்கின்றோம்.
எங்கள் கட்சியின் கடந்த சில நாள்களில் இடம்பெற்ற சந்திப்புகள் சம்பந்தமாக உணர்வுபூர்வமான கருத்துகள் எழுந்துள்ளன. அவற்றைப் புரிந்துகொண்டு நாங்கள் மதிக்கின்றோம். தமிழரசுக் கட்சியின் தலைவர் ஏனைய கட்சிகளைத் தேடிச் சந்திப்பது பற்றி நாங்கள் கூறியபோது, நாங்கள் சந்திப்பை ஒழுங்குபடுத்தியதால் நாங்களே தேடிச் சென்று சந்திக்கவேண்டும் என்பதை எங்கள் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

**யார் அந்தத் தும்புத்தடி?**

கஜேந்திரகுமாருடனான சந்திப்பு அவருடைய இல்லத்திலேயே ஒழுங்குசெய்யப்பட்டது. எனக்கு கஜேந்திரகுமாரின் எண்ணம் பற்றித் தெரியும். எனவே நானும் அதற்கு இணங்கினேன். எனினும் இடையில் கஜேந்திரகுமார் ஊடகச் சந்திப்பில் தும்புத்தடி கதையைச் சொன்னார். அதன்பின்னர் கட்சிக்குள் சலசலப்பு எழுந்ததாலேயே இடத்தை மாற்றினோம். எனினும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என்னைப் பார்த்து தும்புத்தடி என்று கூறவில்லை. தன்னுடைய கட்சியிலிருந்து முதலமைச்சராக நிறுத்தப்படவுள்ளனர்தான் தும்புத்தடி என்றார். யார் அந்தத் தும்புத்தடி என்பதை அறிய நாங்கள் ஆவலாக எதிர்பார்த்திருக்கின்றோம்.
நாங்கள் எவருடனும் கூட்டுச்சேரவில்லை. மக்கள் எங்களுக்கு கொடுத்த ஆணையின் பிரகாரம் நாங்கள் அதிகாரத்தை பெறக்கூடிய ஓர் அரசியற்கட்சி. அந்த அதிகாரத்தைப் பெறுவதற்கு மக்கள் தீர்ப்பளித்த பிற்பாடு அதற்கு குறுக்காக எவரும் வரக்கூடாது என நாங்கள் ஏனைய கட்சிகளுக்கு எச்சரிக்கை விடுகின்றோம்.

**குறுக்கே எவரும் வரவேண்டாம்**

பலர் புதிய அணிகளை உருவாக்கியும் தேசிய மக்கள் சக்தியை மேவி வரமுடியவில்லை. இலங்கை தமிழரசுக் கட்சி மட்டுமே தேசிய மக்கள் சக்தியைத் தோற்கடித்தது. அதனால் மக்களின் ஆணையைப் பெற்ற நாங்கள் எல்லா சபைகளிலும் (17 சபைகளில்) நிர்வாகத்தை அமைப்பதற்கு உரித்துடையவர்கள். குறுக்கே எவரும் வரவேண்டாம் என்ற எச்சரிக்கையை ஏனைய கட்சிகளுக்கு விடுக்கின்றேன் - என்றார். (அ-எ-26)

## புற்றுநோய்...

கிளை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்தச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் பொது மக்கள், தன்னார்வ அமைப்புகள் மற்றும் சில தன்னார்வலர்களின் கடுமையான உழைப்பின் ஊடாக நிறுவப்பட்ட இந்த மருத்துவமனை, இன்றுவரை ஆயிரக்கணக்கான புற்றுநோயாளர்களுக்கு உயிருக்குப் போராடும் வாழ்வாதார சிகிச்சையை வழங்குகின்றது. ஆயினும், அப்போதும் இப்போதும் தொடர்ந்து சிலர் மேற்கொள்ளும் மறைமுகமான நடவடிக்கைகள், வஞ்சகப் போக்குகள் மற்றும் திட்டமிட்ட இடையூறுகள் இதன் நிரந்தர மேம்பாட்டுக்கும் சேவைக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்திவருகின்றன.
பல ஆண்டுகளாக புற்றுநோயாளர்களுக்காக அர்ப்பணிப்போடு பணியாற்றிவரும் புற்றுநோய் நிபுணர் மருத்துவர் கிருஷாந்திக்கு எதிராக நடக்கும் அவதூறு பரப்பல், சமூக வலைத்தளங்களினூடான வசைபாடல்கள் மற்றும் தனிப்பட்ட தாக்குதல்களை எமது சங்கம் கடுமையாகக் கண்டிக்கின்றது. அவரை மனதளவில் பாதித்து, சேவையில் இருந்து பின்வாங்கவைக்கவே இது மேற்கொள்ளப்படுகின்றது என்று எமது சங்கம் தெளிவாக அறிந்துவருகின்றது.
சவாலுக்கு உரிய இந்தச் சூழ்நிலை ஒரு சில தனிநபர்களின் துயரம் மட்டுமல்ல; நோயாளர்களின் உயிரிழப்புக்கு வழிவகுக்கும் சமூக மருத்துவப் பின்னடைவுகளுக்கு இடமளிக்கும் நிலையை ஏற்படுத்தும். மருத்துவ நிபுணர்களுக்கு எதிரான இத்தகைய களங்கப்படுத்தல், ஏழை நோயாளர்களின் உரிமைகளை நேரடியாகத் தாக்குகின்றது.
தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையின் சேவைகள் குறைக்கப்பட்டு, அதன் தரம் சிதைக்கப்படுவதற்கான பின்னணியில் நிர்வாகச் சீர்கேடுகள், ஊழல் மற்றும் சட்டவிரோத ஒழுங்குகள் செயற்படுகின்றன என்பதையும், அவை உறுதியான தண்டனைவிதிகள் இன்றி தொடர்கின்றன என்பதையும் எமது சங்கம் ஆழ்ந்த கவலையுடன், உன்னிப்பாக அவதானித்துவருகின்றது.
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தெல்லிப்பழை கிளை புற்றுநோய் நிபுணர் மருத்துவர் கிருஷாந்தியின் பாதுகாப்பும், பணிச் சுதந்திரமும் உறுதி செய்யப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. அவதூறு பரப்பும் நபர்களுக்கு எதிராக உடனடியாக நிர்வாக, சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றது.
தெல்லிப்பழை மருத்துவமனை மற்றும் அதன் அனைத்து பிரிவுகளும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு உள்ளடங்கலாக பாதுகாக்கப்பட்டு மேம்பட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். நோயாளர்களுக்கான உயர்தர சிகிச்சைகள் அரச மருத்துவமனையில் தொடரவேண்டும் என்பதற்காக, எதிர்வரும் நாள்களில் தொழிற்சங்க நடவடிக்கைகள் அவசியமானால் தீவிரப்படுத்தப்படும். நமது நோக்கம் உன்னத நோக்கம்கொண்ட தனிநபர்களைக் காப்பதல்ல; நோயாளியின் உரிமைகள், வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-எ-26)

## சட்டத்தரணி...

ஒருவர், பாதிக்கப்பட்டவர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், இணுவில் பிரதேசத்தில் நடந்துள்ளது.
சட்டத்தரணி ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு 'கள்ள உறுதி எழுதினார்' என்று இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. இணுவில் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் அந்தச் செய்தியைத் தனது பேஸ்புக் கணக்கில் பகிர்ந்ததுடன், சட்டத்தரணிக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்துப்பகிர்வும் செய்திருந்தார் . இது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தது.
முறைப்பாட்டுக்கு அமைய விசாரணை மேற்கொண்ட பொலிஸார், பேஸ்புக்கில் பதிவைப் பகிர்ந்து சட்டத்தரணிக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்துப் பதிவிட்டவரைக் கைதுசெய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.
இந்தநிலையில், சட்டத்தரணி தொடர்பாக செய்தி வெளியிட்ட இணையத்தளம் தொடர்பான விசாரணைகளும் பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத திண்மக்கழிவகற்றல் கண்டனப் போராட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 9

இணுவில் காரைக்கால் பகுதியில் நல்லூர்ப் பிரதேசசபையினரால் சட்டவிரோதமாகத் திண்மக் கழிவகற்றல் நிலையம் அமைக்கப்பட்டு இரசாயன, இலத்திரனியல், மருத்துவக்கழிவுகளை வகைப்படுத்தாது தீயிட்டுக் கொளுத்திச் சூழல் மாசடையச் செய்யும் செயலுக்கு எதிராகச் சமூகச் செயற்பாட்டாளர்களின் ஏற்பாட்டில் கண்டனப் போராட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல்10 மணியளவில் யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இணுவைப் பண்பாட்டின் மூலாதார மாக விளங்கும் சிவன் கோவிலும், அதனுடன் இந்துமயானமும் இணுவில் காரைக்கால் பகுதியில் இணைந்திருப்பது சிறப்பம்சமாகும். விளை நிலங்களும், குடியிருப்புகளும் நிறைந்த இந்தப் புனித சூழல் எவ்விதமான திட்டமிடலுமில்லாமல் நல்லூர்ப் பிரதேசசபையினரால் குப்பைகள் கொட்டப்படும் இடமாக மாற்றப்பட்டுள்ளது.

இதனைக் கண்டித்து 'இணுவில் காரைக்கால் சிவன் கோவில் புனிதத்தை மீட்டெடுப்போம்' எனும் தொனிப்பொருளில் இன்று முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)



மெரிக்க அதிபர் ட்ரம்புடன் மோதல்

# புதிய அரசியற்கட்சியை ஆரம்பிக்கவுள்ளார் மஸ்க்

உலகப் பணக்காரரான எலான் மஸ்க், 'தி அமெரிக்கன் பார்ட்டி' என்ற பெயரில் புதிய அரசியற்கட்சியை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்புடன் ஏற்பட்ட மோதல்களைத் தொடர்ந்து, அமெரிக்க அரச நிர்வாகத்தில் இருந்து எலான் மஸ்க் விலகியிருந்தார். இதன் பின்னர் எலான் மஸ்க்கிற்கும், ட்ரம்புக்கும் இடையில் வார்த்தை மோதல்கள் வலுப்பெற்றிருந்தன. இவ்வாறான பின்னணியிலேயே, 'தி அமெரிக்கன் பார்ட்டி' என்ற பெயரில் புதிய அரசியற்கட்சியை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

'அமெரிக்காவுக்குப் புதிய அரசியற்கட்சி தேவையா' என்று சமூக வலைத்தளத்தில் எலான் மஸ்க் வாக்கெடுப்பை நடத்தியிருந்தார். வாக்கெடுப்பில் கலந்துகொண்ட 80 வீதத்தினர் 'புதிய கட்சியொன்று தேவை' என்று தெரிவித்ததைத் தொடர்ந்தே, தனது கட்சி தொடர்பான அறிவிப்பை எலான் மஸ்க் வெளியிட்டுள்ளார். எலான் மஸ்க் பிறப்பால் ஒரு தென்னாபிரிக்கர். எனவே, அவருடைய 'தி அமெரிக்கன் பார்ட்டி' ஆட்சியைப் பிடித்தாலும் எலான் மஸ்க்கால் அதிபராக முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியில் முழுமையான நம்பிக்கை உள்ளது

*புலிகளின் ஆதரவு தொடர்பான கேள்விக்கு கனேடியப் பிரதமர் கார்னி 'நச்' பதில்*

**ஒட்டாவா, ஜூன் 9**

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியின் நேர்மையில், எனக்குத் துளியளவும் சந்தேகம் இல்லை என்று கனேடியப் பிரதமர் கார்னி பாராட்டியுள்ளார்.**

ஈழத்துப் பின்புலம் உள்ள ஹரி ஆனந்தசங்கரி, விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டுவருகின்றது. எனவே, 'விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆதரவாளர், எவ்வாறு தேசியப் பாதுகாப்பில் நேர்மையாகச் செயற்படுவார்?' என்று தோரணையில் பிரதமர் கார்னியிடம் ஊடகவியலாளர்கள் வினவியுள்ளனர்.

இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியின் நேர்மையில் எந்த அச்சமும், ஐயப்பாடும் இல்லை என்று பிரதமர் கார்னி கூறியுள்ளார். ஹரி ஆனந்தசங்கரி மிகவும் நேர்மையானவர். தனது கடமையை சிறந்த முறையில் மேற்கொள்பவர் எனவும் பிரதமர் கார்னி தெரிவித்துள்ளார்.

தேசியப் பாதுகாப்பு விவகாரத்தில் எந்தவொரு பிரச்சினையும் ஏற்படுவதற்குச் சாத்தியமில்லை. நீதியமைச்சர், சட்டமா அதிபராகப் பணியாற்றிய ஹரிக்கு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றுவது சிரமமாக இருக்காது என்று பிரதமர் கார்னி மேலும் கூறியுள்ளார். (ம)



வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டுவில் வேரக்கேணி கந்தசுவாமி கோவில் விசுவாவசு வருடத்துக்கான திவ்ய மஹோற்சவப் பெருவிழாவின் இரதோற்சவத் திருவிழா நேற்று பெருந்திரளான பக்தர்கள் சூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. இன்று காலை 9மணிக்குத் தீர்தோற்சவம் இடம்பெறவுள்ளது. (ச-28)

# சபைகளைக் கைப்பற்றுவதற்கு கைகோர்க்கும் எதிர்க்கட்சிகள்

*கொழும்பு, ஜூன் 9*

*இன்னும் ஆட்சி அமைக்கப்படாமல் இருக்கும் 178 சபைகளில் நூற்றுக்கு மேற்பட்ட சபைகளில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.*

*அவற்றுள் 85 சபைகளில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் தவிசாளர்களை நியமிப்பதற்கும், மொட்டுக்கட்சி 15 தவிசாளர்களை நியமிப்பதற்கும், ஐக்கிய தேசியக் கட்சி 10 தவிசாளர்களை நியமிப்பதற்கும், பொதுஜன ஐக்கிய முன்னணி 15 தவிசாளர்களை நியமிப்பதற் கும் இணக்கம் காணப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. மேற்படி சபைகளில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்கும் நோக்கில் இக்கட்சிகளிடையே பல நாள்களாக பேச்சுகள் இடம்பெற்றுவந்தன.*

*இந்தப் பேச்சுகள் அனைத்தும் இப்போது வெற்றிகரமாக நிறைவடைந்துள் ளன என்று ஐக்கிய மக்கள் சக்தி முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.*

*இதனைத் தொடர்ந்து தவிசாளர்களாக கட்சி நியமிக்கும் உறுப்பினர்களுக்கு ஆதரவு வழங்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி அக்கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் கடிதங்கள்மூலம் கோரிக்கை விடுப்பதற்கு முடிவெடுத்துள்ளது என்றும் தெரியவருகின்றது. (ச-75)*

# நிபந்தனையற்ற போர் நிறுத்தத்துக்கு ரஷ்யாவை அழைத்தார் ஹெலன்ஸ்கி

ரஷ்யா முழுமையான மற்றும் நிபந்தனையற்ற போர் நிறுத்தத்துக்கு முன்வர வேண்டும் என்று, உக்ரைன் அதிபர் ஹெலன்ஸ்கி கோரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்ய விமான நிலையங்கள் மீதான தாக்குதலுக்குப் பதிலடியாக, உக்ரைனின் தலைநகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை இலக்குவைத்து ரஷ்யா நேற்றுமுன்தினம் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதில் உக்ரைனின் உட்கட்டமைப்புகள் பல சேதமடைந்துள்ளன. இவ்வாறான பின்னணியிலேயே, நிபந்தனையற்ற போர் நிறுத்தம் தொடர்பில் ஷெலன்ஸ்கி கருத்துக் கூறியுள்ளார்.

'எங்கள் சுதந்திரம், எங்கள் அரசு மற்றும் எங்கள் மக்களைப் பாதுகாக்க நாங்கள் அனைத்தையும் செய்கிறோம். இந்த நடவடிக்கைகளின் அடுத்தகட்டமாக, ரஷ்யாவுடன் நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தை நடத்தவும் தயாராக உள்ளோம். ரஷ்யாவுடனான அமைதியை வெளிப்படையான மனதுடன் உக்ரைன் எதிர்கொள்ளும்' என்றும் ஹெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். (ம)

## வாய்ப்புள்ள...

பொதிகள் போக்குவரத்துச் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டது. அந்த நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது பல்வேறு உள்ளூராட்சிசபைகளில் தீர்மானம் மிக்க சக்தியாக தேசிய மக்கள் சக்தி உள்ளது. ஆட்சியமைப்பது தொடர்பில் பல்வேறு தரப்புகள் எங்களோடு உரையாடுகிறார்கள். இதுவரை காலமும் எங்களுக்கு எதிராக ஓரணியில் திரண்டு தூற்றியவர்கள் இன்று எங்களை காதலுடன் பார்க்கிறார்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உருவாக்கப்படவுள்ள எந்தவொரு உள்ளூராட்சி சபை நிர்வாகங்களுக்கும் இடையூறாக நாங்கள் இருக்கமாட்டோம். கடந்த காலங்களில் எங்களை தூற்றி இனவாத ரீதியாக தங்களின் இருப்பைத் தக்க வைத்துக்கொண்ட எந்தவொரு அணியுடனும் சேரப்போவதில்லை.

யாழ்.மாவட்டத்தின் ஒரு சில உள்ளூராட்சி சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதற்கான சூழல் ஏற்பட்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளை நாங்கள் கண்டிப்பாக மேற்கொள்வோம். யாழ்.மாநகரசபையில் நாங்கள் போட்டியிடுவோமாக இருந்தால் முதன்மை வேட்பாளராக சு.கபிலனையே முதல்வர் வேட்பாளராக நிறுத்துவோம் - என்றார். (அ-எ-26)

## ஜேர்மனிக்கு...

செய்யப்பட்டுள்ளன. இலங்கை மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளுக்கிடையில் இரு தரப்பு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன. ஜேர்மன் முதலீடுகளை இலங்கைக்குப் பெறுவது சம்பந்தமாகவும், ஆடை ஏற்றுமதி பற்றியும் விசேட கவனம்செலுத்தப்படவுள்ளது. வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட குழுவினரும் ஜேர்மன் செல்கின்றனர்.

இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு அமெரிக்காவில் வரி விதிக்கப்பட்டுள்ள நிலையில், ஐரோப்பா சந்தையை இலங்கை இலக்குவைத்துள்ள நிலையில், ஜனாதிபதியின் இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-எ-44)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் ... உள்ள அவர்களது பணிமனையில் 09.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org